## சுருக்கம்

கலையும் பண்பாடும் – திருமலை திருப்பதி தேவஸ்தானம் – ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோவில், வருடாந்திர கார்த்திகை பிரமோத்சவம் 2018 – உற்சவர் திருவீதி வலத்தில் தமிழக தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது – செலவினங்களுக்காக ரூ.2,95,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண். 34

நாள்: 12–03–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், மாசி 28

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண் 68, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண் 2) துறை, நாள் 28.03.2018
2. இணை செயல் அலுவலர், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி அவர்களின் நேர்முகக் கடித எண் DP-11-78022(31)/330/2018-HDPP-TTD, நாள் 05.11.2018
3. செயலாளர், இந்து தர்ம பிரச்சார பரிஷத், திருமலை திருப்பதி தேவஸ்தானம் அவர்களின் 21.11.2018 நாளிட்ட மின்னஞ்சல்
4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.2266/இ1/2018, நாள்: 03.10.2018 மற்றும் 30.01.2019

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருச்சானூர், அருள்மிகு பத்மாவதி தாயார் திருக்கோவிலில் 15.11.2017 முதல் 23.11.2017 வரை நடைபெற்ற வருடாந்திர கார்த்திகை பிரமோத்சவ உற்சவர் திருவீதி வலத்தில் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் தஞ்சாவூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 18.11.2017 மற்றும் 19.11.2017 ஆகிய இரண்டு நாட்கள் 70 கிராமியக் கலைஞர்களைக் கொண்டு தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டதற்கான செலவினங்களுக்காக ரூ. 3,00,000/– தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

2. திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருச்சானூர் அருள்மிகு பத்மாவதி தாயார் திருக்கோவிலில் 04.12.2018 முதல் 12.12.2018 வரை நடைபெறவுள்ள வருடாந்திர கார்த்திகை பிரமோத்சவத்தில் உற்சவர் திருவீதி வலத்தில் இரண்டு கலைக்குழுக்களைக் கொண்டு தெய்வீக கிராமிய நடனக்கலை நிகழ்ச்சிகள் நடத்தித் தருமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் இணை செயல் அலுவலர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

3. திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருச்சானூர், அருள்மிகு பத்மாவதி தாயார் திருக்கோவிலில் 04.12.2018 முதல் 12.12.2018 வரை நடைபெறவுள்ள வருடாந்திர கார்த்திகை பிரமோத்சவத்தில் உற்சவர் திருவீதி வலத்தில் தமிழக அரசின் சார்பாக 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய இரண்டு நாட்களில் தமிழக தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகள் நடத்தித் தருமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், செயலாளர், இந்து தர்ம பிரச்சார பரிசத், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி, அவர்கள் கேட்டுக் கொண்டார்.

4. திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருச்சானூர், அருள்மிகு பத்மாவதி தாயார் திருக்கோவிலில் 04.12.2018 முதல் 12.12.2018 வரை நடைபெற்ற "வருடாந்திர கார்த்திகை பிரம்மோத்சவம் 2018ல்" கலை பண்பாட்டுத் துறை, கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு கீழே அட்டவணையில் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.2,95,000/–ஐ 2018–2019ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1 கோடியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வழங்குமாறு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் கலை பண்பாட்டு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ எண். | கலை நிகழ்ச்சிகள் விவரம் | கலைஞர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பெரிய மேளம் | 14 | 80,000/– |
| 2 | கொம்பு வாத்தியம் | 5 | 30,000/– |
| 3 | பொய்க்கால் குதிரை, நையாண்டி மேளம் | 10 | 60,000/– |
| 4 | கொக்கலிக்கட்டை, ஆழி பொம்மையாட்டம் | 8 | 45,000/– |
| 5 | கைச்சிலம்பாட்டம் | 8 | 45,000/– |
| 6 | ஒயிலாட்டம் | 6 | 35,000/– |
| | **மொத்தம்** | **51** | **2,95,000/–** |

5. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருச்சானூர், அருள்மிகு பத்மாவதி தாயார் திருக்கோவிலில் 04.12.2018 முதல் 12.12.2018 வரை நடைபெற்ற "வருடாந்திர கார்த்திகை பிரம்மோத்சவம் 2018ல்" கலை பண்பாட்டுத் துறை, கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 08.12.2018 மற்றும் 09.12.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக தெய்வீக கிராமிய நடனக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.2,95,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 0933)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேற்காணும் தொகை பட்டுவாடா செய்யப்பட்டமைக்கான பற்றுச்சீட்டுகள், இரசீதுகள், புகைப்பட நகல்கள் மற்றும் செய்தி நறுக்குகள் ஆகியவற்றை உரிய பயனீட்டுச் சான்றுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.8908/நிதி(கல்வி–II)துறை/2019, நாள் 08.03.2019–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர்(பொ), மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்

நகல்:-
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

13/03/19

**பிரிவு அலுவலர்**

12/03/19